DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 9/2017

Miscellaneous :

Sessions : DW 1

Deposition of Witness for

| | |
|---|---|
| Name | சந்தோஷ்ராஜ் |
| Father / Husband Name | சுப்புரமணி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.04.2026

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் M.Com வரை படித்துள்ளேன். என்ன வேலை செய்கிறேன் என்றால் கமிஷன் அடிப்படையில் அரசு அலுவலகங்களில் பட்டா சிட்டா, DTCP Approval போன்ற ஆவணங்களை வாங்கி தரும் தொழில் செய்து வருகிறேன். புகார்தாரர் எனக்கு எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 10 வருடங்களாக நானும் அவரும் நண்பர்கள். கண்ணன் மற்றும் விஜயலட்சுமி கண்ணன் ஆகியோர் நடத்துவதாக கூறும் அண்ணாமலை பைனான்ஸ் என்ற நிறுவனம் மதுராந்தகத்தில் எங்கு உள்ளது என்றால் ஆர்.கே தியேட்டருக்கு எதிரே உள்ளது. அந்த நிறுவனம் எத்தனை ஆண்டுகளாக செயல்படுகிறது என்றால் சுமார் 15 ஆண்டுகளாக செயல்படுகிறது. நான் அண்ணாமலை பைனான்ஸில் எந்த தேதியில் எவ்வளவு ரூபாய் கடன் வாங்கினேன் என்றால் ரூ.5 லட்சம் கடன் வாங்கினேன், கடன் வாங்கிய தேதி ஞாபகமில்லை. மேற்படி கடனை எந்த தேதியில் எவ்வளவு ரூபாய் கொடுத்து அடைத்தேன் என்றால் 5 லட்சம் ரூபாயும் அதற்கு வட்டியும் கொடுத்தேன், தேதி ஞாபகமில்லை.

2. அண்ணாமலை பைனான்ஸில் கடன் வாங்கியதற்கோ, கடனை திருப்பி செலுத்தியதற்கோ ஆவணங்கள் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. நான் பணம் வாங்கும்போதோ, அல்லது அதை திரும்ப செலுத்தும்போதோ சாட்சியாக யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. அண்ணாமலை பைனான்ஸின் உரிமையாளர் கண்ணன் என்பவரை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் அண்ணாமலை பைனான்ஸில் கொடுத்ததாக கூறும் காசோலைகளின் எண் என்ன என்றால் ஆக்ஸிஸ் பேங்க் காசோலை அதன் எண் ஞாபகமில்லை. நான் உண்மையிலேயே நிதி நிறுவனத்தில் கடன் வாங்கி அதற்காக காசோலையை கொடுத்திருந்தால், அந்த காசோலையின் எண், தேதி ஆகியவற்றை சரியாக சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் அண்ணாமலை பைனான்ஸ் நிதி நிறுவனத்தில் எப்போது காசோலையை திருப்பி தரும்படி கேட்டேன் என்றால் பணத்தை கொடுத்த பிறகு 6 மாதம் கேட்டேன், கேட்ட தேதி ஞாபகமில்லை.

3. என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலை என்னுடையது தான். அதில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான். கண்ணன் என்பவர் காசோலையை திரும்ப தரவில்லை என காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. காசோலையை திரும்ப தரும்படி அறிவிப்போ, கடிதமோ கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ஏற்கெனவே கோதண்டராமன் என்பவர் எனக்கு எதிராக சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு என்ன நிலையில் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. கண்ணன் என்பவர் தான் இந்த வழக்கின் புகார்தாரரிடம் என்னுடைய காசோலையை கொடுத்தார் என்பதை காட்ட ஆதாரம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை.

4. புகார்தாரரிடம் ஏற்கெனவே என் தந்தை நிலத்தை அடமானம் வைத்து பணம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. என் தந்தையும் நானும் தொடர்ச்சியாக புகார்தாரரிடம் கடன் வாங்கக்கூடிய நபர்கள் என்றாலும், அந்த அடிப்படையில்தான் இந்த வழக்கு காசோலையில் கண்ட தொகையை புகார்தாரரிடம் கடனாக வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கெனவே நான் இன்டஸ்இன்ட் வங்கியில் கடன் வாங்கி என்னுடைய வீட்டையும் கடையையும் ஜப்தி செய்துள்ளார்கள் என்றால் சரிதான். புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு வந்தது என்றால் சரிதான்.

5. அந்த அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு ஏதாவது கொடுத்தேனா என்றால் நான் வங்கி பிரச்சனையில் இருந்ததால் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. என்னுடைய முதல் விசாரணையில் கண்ட சங்கதிகள் அனைத்தும் உண்மை என்றால் அதை நான் குறிப்பிட்டு பதில் அறிவிப்பு கொடுத்திருப்பேன் என்றாலும், என்னுடைய முதல் விசாரணையில் கண்ட சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும் சரியல்ல. நான் வங்கியில் கடன் வாங்கியது மட்டுமல்லாமல் மதுராந்தகத்தில் பல நபர்களிடம் கடன் வாங்கி காசோலை மட்டும் கொடுத்து மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் காசோலை கொடுத்து மோசடி செய்ததால் சட்டப்படி தண்டிக்கத்தக்கவர் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் கண்ட சங்கதிகள் அனைத்தும் உண்மையானது அல்ல என்றாலும், அதை நிரூபணம் செய்ய ஆவணங்கள் இல்லை என்றாலும் சரியல்ல.